[1973 ஏப்ரல் 5

திரு. என். கிட்டப்பா: அரசினர் மகளிர் கல்லூரிக்கு 'ஞானம்பிகை' என்னும் பெண்ணின் பெயர் இணைக்கப்பட்டிருக்கிறது. எந்த அரசினர் கல்லூரிக்கும் குறைந்தபட்சம் ஐந்து லட்சம் ரூபாய் நன்கொடை தருபவர்களுக்குத்தான் அவர்கள் குறிப்பிடுகிற பெயர் வைக்கவேண்டும் என்ற நியதி இருக்கிறது. அப்படியிருக்க, ஞானம்பிகை என்ற பெயரில் வைக்கப்பட்டிருப்பதால் அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு தொகை கொடுத்திருக்கிறார்கள் என்று தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இதனுடைய முழு விவரமும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். தெரிந்திருந்தும் அவர்கள் கேட்கிறார்கள். தருமபுர ஆதீனம் இரண்டு லட்ச ரூபாய் இதற்கு உதவித் தொகை தந்து ஞானம்பிகை தெய்வத்தின் பெயரால் இந்த மகளிர் கல்லூரியை வைக்க இணங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் வேறு யாரும் தொகை ஏதும் வழங்காத நிலையில் ஐந்து லட்ச ரூபாய் தொகை அளித்தபிறகு கல்லூரியை வைத்திருக்கவேண்டும். ஆனால், ஒரு லட்சம், ஒன்றரை லட்சம் ரூபாய் தருகிற காலத்திலேயே இந்தக் கல்லூரி அங்கே துவங்கப்பட்டது தவறாகும். ஐந்து லட்ச ரூபாய் தந்தபிறகு துவங்கியிருந்தால் இந்த இடர்ப்பாடு வந்திருக்காது. தருமபுர ஆதீனம் இரண்டு லட்ச ரூபாய் தருவதாக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் பேசியதின் விளைவாக அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க அந்தப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

Auto testing Laboratory in Guindy Engineering College

* 629 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any auto-testing laboratory is functioning at the Engineering College Campus, Guindy, Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ & இ) ஊர்திப் பொறியியல் ஆய்வகம் ஒன்றை 1972-ல் கிண்டி பொறியியல் கல்லூரியில் புதிதாகத் தொடங்க இவ்வரசு அனுமதி வழங்கியுள்ளது. இவ்வாய்வகத்தின் கட்டட வேலைகள் முடியுந்தறுவாயில் உள்ளன. தவிரவும் முப்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள

1973 ஏப்ரல் 5]

தளவாடங்களும் வாங்கப்பட்டுள்ளன. ஊர்திப் பொறியியலின ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் ஆய்வுத் தேவைகளே இந்த ஆய்வகம் நிறைவேற்றும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த நிறுவனத்திலே எத்தனை மாணவர்களைச் சேர்ப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது? எத்தனை பேர் இதுவரையிலும் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்ற விபரத்தை அறிவிப்பார்களா?

மாண்புகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கென்று தனியாக மாணவர்களைச் சேர்க்கவில்லை. ஆட்டோமோட்டிவ் எஞ்சினியரிங் பிரிவை ஏற்படுத்தி அங்கே படித்த மாணவர்கள் இதில் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பு இருக்கும் என்று கருதித் தொடங்கப்பட்டது. ஆய்வு அளவிலே கூட ஏற்பட்டிருந்தாலும் வளரும் நிலை ஏற்பட்டால் ஆட்டோமொபைல் எஞ்சினியரிங் பிரிவை வளர்க்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிற மற்றத் துறைகளுக்கும் பயன்படுகின்ற வகையில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : கிண்டியில் தொடங்க இருக்கும் இந்த ஊர்தி பொறியியல் பிரிவில் அங்கே ஆட்டோமோட்டிவ் எஞ்சினியரிங் படித்தவர்களைமட்டும் சேர்த்துக்கொள்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதோடு புதிய மாணவர்களைச் சேர்த்துப் பயிற்சியளிக்கும் திட்டத்தையும் அரசு செயல்படுத்துமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கென்று புதிய மாணவர்களைச் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை. கிண்டி எஞ்சினியரிங் பிரிவில் மெக்கானிக்கல் எஞ்சினியரிங் பயிற்சி பெற்றவர்கள் இந்த ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டு, நன்மை பெற முடியும் என்ற நோக்கத்தோடு இது தொடங்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : இந்தப் பிரிவு சென்னை கிண்டியில் தவிர, வேறு ஏதாவது மாவட்டக் கல்லூரிகளில் இருக்கிறதா? இல்லை என்றால் அடுத்துவரும் ஆண்டுகளில் தொடங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வேறு சில குறிப்பிட்ட கல்லூரிகளிலும் இப்பிரிவு இருக்கிறது. அதற்கான விபரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் தகவல் சேகரித்துக் கொடுக்கப்படும்.